


நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் .கே.என்.நேரு உறையூர், மெத்தடிஸ்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று முன்தினம் (05.09.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார் மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் சரவணன், முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி.கிருஷ்ணப்பிரியா, தலைமையாசிரியர் திருமதி.வசந்தி, நகரப்பொறியாளர் சிவபாதம், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முன்னாள் காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி இல்ல திருமண விழாவில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் வி.நாராயணசாமி , விழுப்புரம் தெற்கு மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.

### ஆண்டிமடம் ஒன்றியம்

# தென்னூர் கிராமத்தில் புதிய பேருந்து வழித்தடம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், செப். 7-

அரியலூர் மாவட்டம், வரதராஜன்பேட்டை பேரூராட்சி, தென்னூர் பேருந்து நிலையத்தில், போக்குவரத்துத் துறையின் சார்பில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட் மூலம் தென்னூர் வேளாங்கண்ணி புதிய பேருந்து வழித்தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் கலந்துகொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், போக்குவரத்துத்துறை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில், பொதுமக்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், மாணாக்கர்கள் உள்ளிட்டோர்களுக்கு அரசு பேருந்து சேவை செயல்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றையதினம், தென்னூர் கிராம பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையில், வரதராஜன்பேட்டை பேரூராட்சி, தென்னூர் பேருந்து நிலையத்தில், தென்னூர் (வரதராஜன்பேட்டை) வேளாங்கண்ணி புதிய பேருந்து வழித்தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் துவக்கி வைத்து, பேருந்தில் பயணம் மேற்கொண்டார்.

அதன்படி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (கும்பகோணம்) லிமிடெட், பேருந்து தடம் எண். 210A, தென்னூரில் (வரதராஜன்பேட்டை) இருந்து புறப்பட்டு ஜெயங்கொண்டம், கும்பகோணம், திருவாரூர், நாகப்பட்டினம் வழியாக வேளாங்கண்ணி சென்றடையும் வகையில் தினசரி பேருந்து இயக்கப்படும். இப்புதியபேருந்து வழித்தடத்தினால் தென்னூர் பகுதியை பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பயனடைவார்கள். எனவே, இப்பேருந்து வசதியினை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து நிர்வாக இயக்குநர் பொன்முடி, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மண்டல பொது மேலாளர்கள் ராஜா,இராமநாதன்,

ஒன்றிய கழக செயலாளர்கள் ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் அந்தோணிசாமி, வரதராஜன்பேட்டை பேரூராட்சி தலைவர் மார்கிரேட் அல்போன்ஸ், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூரில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில்

# 7 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் சேவை!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், செப். 7-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தேசிய கால்நடை தடுப்பூசி திட்டத்தின் கீழ் 07 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளின் சேவையை துவக்கி வைத்தார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் 29.08.2024 வியாழக்கிழமை அன்று கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தேசிய கால்நடை தடுப்பூசி திட்டத்தின் கீழ் 07 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளின் சேவையை மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்.

அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்துறைகளின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வரு கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் தேசிய கால்நடை தடுப்பூசி திட்டத்தின் (NADCP) கீழ் கிராம பகுதிகளில் உள்ள கால்நடைகள் மற்றும் கால்நடை வளர்ப்போர்களுக்கு கால்நடை மருத்துவ சேவைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் முதல் கட்டமாக 200 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் சேவையை 20.08.2024 அன்று துவக்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக திருப்பூர் மாவட்டத்திற்கு முதல் கட்டமாக 07 கால்நடை மருத்துவ ஊர்திகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் மூலம் தொலைதூர கிராமங்களிலுள்ள கால்நடை மருந்தகங்கள் இல்லாத கிராம பகுதிகளுக்கும், கால்நடை மருத்துவ சேவைகளை அந்தந்த இடத்திலேயே வழங்கும் நோக்கத் துடனும் இத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல், ஆடு மற்றும் கன்றுகளுக்கு குடல் புழு நீக்கம், நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை, கால்நடைகளுக்கு தடுப்பூசி ஆய்வு, சினை பிடிக்காத மாடுகளுக்கு சிகிச்சைகள் போன்றவை மேற்கொள்ளப்படும்.

நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளானது காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை குறிப்பிடப்பட்டுள்ள வழி தடங்களுக்கு சென்று கால்நடைகளுக்கு தேவையான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும். மேலும், அவசர காலங்களில் மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை 1962 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளும் பட்சத்தில் அழைப்புகளை ஏற்று கால்நடைகளுக்கு சிகிச்சை மேற்கொள்ளப்படும். எனவே, இச்சேவையினை விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று அமைச்சர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், துணை மேயர் ரா.பாலசுப்பரமணியம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், மாவட்ட முன்னாள் பொருளாளர் ரத்தினசாமி, மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத் துறை) மரு.புகழேந்தி, துணை இயக்குநர் மரு.பிரகாஷ், உதவி இயக்குநர்கள் மரு.செந்தூர் செல்வன் (திருப்பூர்), மரு.ஜெயராமன் (உடுமலைப் பேட்டை), மரு.வெங்கடேசன் (தாராபுரம்), கால்நடை மருத்துவர்கள் மரு.ஜெகநாதன், மரு.அறிவுசெல்வன், மரு.மணிவண்ணன், மரு.திவாகர், மரு.கார்த்தி, கால்நடை ஆய்வாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமையில்

# நாமக்கல் பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ. மகள் திருமண விழா!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் - கே .பொன்னுசாமி எம்.எல்.ஏ. முன்னிலை!

நாமக்கல், செப்.7-

நாமக்கல் கிழக்கு மாவட்டம் புதுச்சத்திரம் ஒன்றியம் கதிராநல்லூர் நத்தமேடு பகுதியைச் சேர்ந்தவரும், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினருமான பெ.இராம லிங்கம் - ஆர். இந்திரா ஆகியோரது மகள் மருத்துவர் ஆர். தீப்தி, திருச்செங்கோடு மாரப்ப நாயக்கன்பட்டி, அத்தியம்பாளையம் பாலக்காடு பகுதியைச் சேர்ந்த ஆர்.பழனிச்சாமி- பி.கமலம் ஆகியோரின் மகனுமான மருத்துவர் பி.ரேவந்த் ஆகியோரது திருமணம் நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள கொங்கு திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையிலும், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

இவ்விழாவில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், அமைச்சர்கள் அர.சக்கரபாணி, மு.பெ.சாமிநாதன், சிவ.வீ.மெய்யநாதன், சு.முத்துசாமி, எஸ்.எஸ்.சிவசங்கர், எம்.பி.க்கள் டி.எம்.செல்வகணபதி, வி.மாதேஸ்வரன், கே.இ.பிரகாஷ், எம்.எல்.ஏ.க்கள் ஈ.ஆர். ஈஸ்வரன், வழக்கறிஞர் ஆர்.ராஜேந்திரன், ராஜா, எம்.பிரபாகரன், சிவ காமசுந்தரி உள்ளிட்ட எம்.எல்.ஏக்கள், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக, மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

முன்னதாக மணமக்களின் உறவினர்கள் ஆர்.அஸ்மிதா, கே.நடராஜன், சண்பக வடிவு, செந்தாமரைச் செல்வி, ராஜா மணிவேல், விஸ்வநாதன், பாரதி, அருள் பூவரசி, தங்கவேல் கண்ணகி உள்ளிட்டோர் அனைவரையும் வரவேற்றனர்.

### காட்பாடி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகக் குழு உறுப்பினர்

# கே.குப்புசாமி இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி!

## அமைச்சர் துரைமுருகன் பங்கேற்கிறார்!

வேலூர், செப். 7 -

வேலூர் மாவட்டம் காட்பாடி சேனூர்ஊராட்சி கழக முன்னாள் செயலாளரும் மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாக குழு உறுப்பினரு மான கே.குப்புசாமி - குணா ஆகியோரின் மகன் கே.கருணாநிதி பெங்களூரு ராமமூர்த்தி - செல்வி ஆகியோரின் மகள் சவுமியா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி வருகிற 8ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு காட்பாடி கரசமங்கலம் துளசி திருமண மண்டபத்தில் வரவேற்பு நிகழ்ச்சி நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது. இதில் கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் இராணிப் பேட்டை ஆர்.காந்தி, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர்ஜி.விசுவநாதன், வேலூர்மாவட்ட அவைத்தலைவர் தி.அ. முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், கழக புரவலர் துரை சிங்காரம், மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை தலைவர் நா.அசோகன், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.



திருமண வரவேற்பு நிகழ்ச்சி ஏற்பாடுகளை மணமகனின் பெற்றோர் செய்துள்ளனர்.

### புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில்

# புதிய அங்காடி கிளையினை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

## பயனாளிகளுக்கு நத்தம் வீட்டுமனை பட்டாவிற்கான ஆணைகளையும் வழங்கினார்!

புதுக்கோட்டை. செப்.7-

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரம், எம்.எம் 278அரசமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்கீழ், காரையூரில் புதிய அங்காடி கிளையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், பயனாளிகளுக்கு நத்தம் வீட்டுமனை பட்டாவிற்கான ஆணைகளை வழங்கினார். பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலன்காக்கும் வகையில் எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் பொது மக்களுக்கு உணவிற்காக தேவைப்படும் அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பல்வேறு குடிமைப் பொருட்கள் பொதுமக்களின் இல்லங்களுக்கு அருகிலேயே பெற்றிடும் வகையில் புதிய நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு வருகிறது. அதன்படி காரையூரில் புதிய அங்காடி கிளை திறந்து வைக்கப்பட்டது.

காரையூரில் இந்த புதிய அங்காடி திறந்து வைக்கப்பட்டதன் மூலம், இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் குடிமைப் பொருட்கள் வாங்குவதற்கு நீண்ட தூரம் சென்று வருவது தவிர்க்கப்பட்டு, தங்களது இல்லங்களுக்கு அருகிலேயே குடிமைப் பொருட்கள் பெரும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த காரையூர் அங்காடியின் மூலம் காரையூர், சங்கரம்பட்டி, மாங்காளிபட்டி, மறவர் குடியிருப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 1,131 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற உள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின்சார்பில், ஆதிதிராவிடர் மக்களைச் சேர்ந்த 32 பயனாளிகளுக்கு நத்தம் வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகள் வழங்கப்பட்டது. இந்தப் பட்டாவிற்கான ஆணைகளை பெற்றுக்கொண்ட பயனாளிகள் அனைவரும் இதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு தங்களது வாழ்வின் பொருளாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். எனவே தமிழக அரசு பொதுமக்களின் மீது மிகுந்த அக்கறைகொண்டு இதுபோன்ற மக்கள்நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது எனவும் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ஆர்.ரம்யாதேவி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் தெய்வநாயகி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் சுதா அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர் சுப்பிரமணியன், அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர் ஆறுமுகப்பெருமாள்,

புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் மேலாளர் பா. பிரபாகரன், பொன்னமராவதி வட்டாட்சியர் எம். சாந்தா முருகேசன், ஊராட்சிமன்றத் தலைவர்கள் மு.முகமது இக்பால் (காரையூர்), முருகேசன் (மேலத்தானியம்), ஒன்றியக்குழு உறுப்பினர் வளர்மதி முருகேசன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் மீனாட்சி மணிகண்டன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், சுந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளவிடுதி, மங்களாகோவில் சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, பயனாளிக்கு விலையில்லா சலவைப் பெட்டியினை வழங்கினார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை , மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், வெள்ளாள விடுதி ஊராட்சி மன்ற தலைவர் எம். பரமசிவம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நாமக்கல் நளா ஹோட்டல் கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார். கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.